# களனி பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஒக்டோபர் 15 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள களனி பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டவாறு ரூபா 537,622 தொகையான 7 நிலையான வைப்புகளின் பெறுமதி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) மாகாண சபை பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய மூலதன மானியம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 2,973,153 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஹுங்ணுபிட்டிய சிறுவர் பாடசாலைக் கட்டிட நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட 20 மூ ஆன முற்பணத் தொகையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ரூபா 1,048,053 தொகை முற்கொடுப்பனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 75,626,516 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,946,182 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,300,837 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 50,167 | 44,501 | 52,449 |
| (ii) | வாடகை | 11,022 | 10,814 | 4,070 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,015 | 1,080 | 648 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | - | - | 693 |

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களின் படி, நிலுவை வருமானம் அறவிடப்படுவதிலான முன்னேற்றம் 49மூ ஆகக் காணப்பட்டது.

### 2.2.2 வீதவரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான வீதவரி மீதி ரூபா 51,647,455 ஆகக் காணப்பட்டதுடன் 1 வருடத்திற்கு மேலான நிலுவையான வீதவரி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,285,543 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான ஏனைய வருமான மீதி ரூபா 7,685,708 ஆகக் காணப்பட்டதுடன் 1 வருடத்திற்கு மேலான நிலுவையான வருமானம் ரூபா 5,280,206 ஆகக் காணப்பட்டது. இதில் ரூபா 2,919,337 தொகை 5 ஆண்டுகளுக்கு மேலான மீதிகளாகும்.

(ஆ) களனி பஸ் தரிப்பிடத்தின் இரண்டு மாடிக் கட்டிட வியாபாரக் கட்டிடத்தின் மேல் மாடியில் உள்ள 10 கடைகள் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 யூலை 10 கணக்காய்வுத் தினம் வரையில் மூடப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விழா மண்டபம் 2009 மார்ச் 01 ஆம் திகதி முதல் வாடகைக் குடியிருப்பாளரால் கைவிடப்பட்டு இருந்ததுடன் அந்நாள் முதல் 2013 யூலை 10 கணக்காய்வுத் தினம் வரையிலான 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீள கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்கப்படுவதற்காக சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வீதவரி**

---

(அ) களனி பஸ் தரிப்பிடத்தின் இரண்டு மாடிக் கட்டிட வியாபாரக் கட்டிடத்தின் மேல் மாடியில் உள்ள 24 கடைகளும் கீழ் மாடியில் உள்ள 17 கடைகளும் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி அல்லது 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதியின் 178(9)(4) இன் பிரகாரம் கேள்வி கோரப்படாது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளுக்கு குத்தகைக்கிடப்பட்ட கிரிபத்கொட பஸ் தரிப்பிடத்தின் வடக்கு எல்லையின் கால்வாய்க்கு அருகில் உள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடையை வாடகைக்கு வழங்குவதற்கான வாடகை உடன்படிக்கையின் 6 ஆம் 7 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக அத்துமீறி 28 கடைகள் வாடகைக் குடியிருப்பாளரால் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இவ் 28 கடைகள் சபையின் தொழில் அதிகாரசபையால் ரூபா 8,741,517 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தன. வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,064,860 தொகை இதற்கு ஈடுசெய்யப்படுவதற்கு சபை உடன்பட்டிருந்தது. 2010 நவம்பர் 01 ஆம் திகதி முதல் கடைகளிலிருந்து வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடப்பட்டிராததுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு

வாடகையை அறவிடுவதற்கு முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களனி பொது நூலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, நூலகத்தில் இல்லாத ரூபா 94,277 பெறுமதியான 1534 நூல்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வுத் தினமாகிய 2013 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களனி பஸ் தரிப்பிடத்தின் இரண்டு மாடிக் கட்டிட வியாபாரக் கட்டிடத்தை நிர்மாணிக்க முன்னர் காணியின் உரிமை தொடர்பாக தீர்வு காணப்படாது வியாபாரக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்காக 30 கடை உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூலப் பணத்தின் பெறுமதி ரூபா 18,505,785 ஆகக் காணப்பட்டது.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

**2.4.1 ஹுணுபிட்டிய சிறுவர் பாடசாலை நிர்மாணிப்பு**

ஹுணுபிட்டிய சிறுவர் பாடசாலைக் கட்டிட நிர்மாணிப்பிற்காக ரூபா 9,981,453 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந் நிர்மாணிப்புகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,409,934 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் தினமாகிய 2013 யூலை 23 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு 15 மாதங்கள் அளவு கடந்திருந்ததெனவும் கட்டிடத்தின் கூரை சீலிங் இடப்படாது குறித்த தரத்திற்கு மாறாக

சுவர்கள் பூச்சிடப்பட்டு மழையாலும் வெய்யிலாலும் கட்டிடத்திற்கு தாக்கம் நேர்வதாக கண்டறியப்பட்டது.

(ஆ) நிர்மாணிப்பு தொடர்பாக ஆலோசனை நிறுவகமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் செயற்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 222,768 தொகை ஆலொசனைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிப்புகளின் குறைபாடு தொடர்பாக சபையால் 2013 மார்ச் 19 ஆம் திகதி ஆலொசனை நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உரிய நிறுவகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாட்டுப் பிணை முறி 2011 ஒக்டோபர் 03 ஆம் திகதி முடிவுற்றிருந்த போதிலும் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஒக்டோபர் 05 ஆம் திகதி செலுத்தப்பட்ட 20% முற்பணத் தொகையில் ரூபா 1,048,053 தொகை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 ஹுணுபிட்டிய கடைத் தொகுதி நிர்மாணிப்பு**

ஹுணுபிட்டிய கடைத் தொகுதி நிர்மாணிப்பிற்கான செயற்திட்டம் 2009 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் கேள்வித் தொகை ரூபா 24,036,582 ஆகக் காணப்பட்டதுடன் 2009 ஒக்டோபர் முதல் 2011 செப்தெம்பர் வரை ரூபா 19,320,324 தொகை இதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் தினமாகிய 2013 யூலை 23 வரையில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இச் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிணை முறிக் காலம் 2011 திசெம்பர் 16 ஆம் திகதி முடிவுற்றிருந்த போதிலும் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இச் செயற்திட்டத்தின் மூன்றாம் பட்டியல் தயாரிக்கப்படுகையில் செய்யப்பட்ட வேலையின் மொத்தப் பெறுமதியான ரூபா 10,174,171 தொகையிலிருந்து முதலாம் மற்றும் இரண்டாம் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி கழித்துக் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் தவறுதலாக இரண்டாம் பட்டியலில் குறிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 4,073,597 தொகை மேலதிகமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 4,073,597 தொகையிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 537,293 தொகை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்படுவதற்காக சபை தவறியிருந்தது.

(ஈ) இச் செயற்திட்டத்தின் 20% முற்பணமாக ரூபா 4,807,317 தொகை 2009 ஒக்டோபர் 14 ஆம் திகதி முதல் 2010 யூன் 17 ஆம் திகதி வரையான காலத்தின் போது ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இத் தொகையில் 2013 யூன் வரையிலும் ரூபா 2,426,486 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் தீர்க்கப்பட வேண்டியிருந்த முற்பணத் தொகை ரூபா 2,380,831 ஆகக் காணப்பட்டது.

(உ) இச் செயற்திட்டத்தின் ஆலோசனைச் சேவை நிறுவகமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் செயற்பட்டிருந்ததுடன், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 145,085 தொகை ஆலோசனைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இச் செயற்திட்டம் இவ்வாறு பல வருடங்கள் தாமதமாகி சபை இது வரையில் ஏற்றிருந்த பாரிய செலவினத்திற்காக முறையான பயன்பாடு கிடைக்கப்பெற்றிராமையால் செயற்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இவ் ஆலோசனைச் சேவையாலான பங்களிப்புத் தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதிருந்தது.

**2.5 வாகனம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்**

மீளாய்வாண்டின் போது சபையால் 2 வாகனங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக ரூபா 867,241 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வாடகை வாகனம் பெறப்படுவது தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு நாளுக்கு ஓடப்பட வேண்டிய தூரத்தின் அளவு உள்ளடக்கப்பட்ட முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனம் எரிபொருள் ஒரு லீற்றருக்கு சராசரி ஓட்டம் 5 – 7 கிலோ மீற்றர் இடைப்பட்ட குறைந்த அளவைக் கொண்டிருந்ததுடன் எரிபொருள் மற்றும் வாடகையாக ரூபா 1,653,725 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

**2.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

20.1 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுடைய பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியின் நாளாந்தம் சேரும் குப்பையின் அளவு 30 – 35 மெட்ரிக் தொன்களாவதுடன் சபையால் இதில் 20 -25 மெட்ரிக் தொன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளில் உக்கலடையும் 09 மெட்ரிக் தொன் குப்பைகளில் சேதனப் பசளையாக்கும் நோக்குடன் மானெல்கம சேதனப் பசளை பிரிவை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. இதன் படி, 2012 ஆம் ஆண்டின் போதும் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 4,627,919 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளாந்தம் குப்பைகள் சேகரிக்கப்படும் குப்பையின் அளவு 20 - 25 மெட்ரிக் தொன்களில் சேதனப் பசளைச் செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும்

உக்கலடையும் குப்பை 09 மெட்ரிக் தொன் குப்பை மாத்திரமாகும். எஞ்சிய குப்பைகள் உக்கலடையும்.'. உக்கலடையாதவை என தேர்ந்தெடுக்கப்படாது சகல குப்பைகளும் கிரவல் மண்ணிடப்பட்டு மூடப்படுகின்றன. இதற்காக மண் வழங்கப்படுவதற்கும் இயந்திரத்தின் மூலம் மண் பதனிடப்படுவதற்கும் சபையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 10,476,611 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சேதனப் பசளைச் செயற்திட்ட நிர்மாணிக்கப்படும் நோக்கு எய்தப்பட்டுள்ளதென்பது சர்ச்சைக்குரிய உட்பட்டிருந்தது.

(ஆ) எவ்வாறெனினும், குப்பைகள் வகைப்படுத்தப்படாது இவ்வாறு மூடப்பட்டதன் மூலம் உக்கலடையாத குப்பை தொடர்ந்தும் இருப்பதனால் இம் முறையின் மூலம் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதற்கு இடமுள்ளமையும், போத்தல்கள், பிளாஸ்டிக் போன்ற உக்கலடையாத குப்பைகள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவற்றை விற்பனை செய்வதன் மூலம் சபைக்கு வருமானத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்